### பிலிப்பியர் 4:9

நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்ட போதனைகள், பெற்றுக்கொண்ட படிப்பினைகள், என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்க்கையில் நீங்கள் பார்த்தவை அனைத்தையும் கடைப்பிடியுங்கள். அப்போது சமாதானத்தின் ஊற்றாகிய கடவுள் உங்களோடிருப்பார்.

### சங்கீதங்கள் 31:8

நான் உனக்கு அறிவு புகட்டுவேன், நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்: உனக்கறிவு தருவேன், உன்மேல் என் பார்வையைத் திருப்புவேன்” என்றீர்.

### 1 தெசெலோனிக்கையர் 5:11

ஆகையால் நீங்கள் இப்போது செய்து வருவதுபோலவே, ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்ளுங்கள்; ஞான வளர்ச்சி அடைய ஒருவர்க்கொருவர் துணை செய்யுங்கள்.

### பழமொழி ஆகமம் 3:11-12

ஆண்டவருடைய கண்டனத்தை, என் மகனே, நீ தள்ளிவிடாதே. அவரால் கண்டிக்கப்படுகையிலும் சோர்ந்து போகாதே. ஏனென்றால், ஆண்டவர் தாம் நேசிப்பவனைக் கண்டிக்கிறார். தந்தை தன் மகனைப்பற்றி மகிழ்வதுபோல் அவரும் மகிழ்கிறார்.

### பழமொழி ஆகமம் 1:7

தெய்வபயமே ஞானத்தின் தொடக்கம். மதியீனரோ ஞானத்தையும் போதனையையும் புறக்கணிக்கின்றனர்.

### சங்கீதங்கள் 24:4

ஆண்டவரே, உம் வழிகளை எனக்குக் காட்டியருளும்: உம் நெறிகளை எனக்குக் கற்பித்தருளும்.

### சங்கீதங்கள் 24:8-9

ஆண்டவர் நல்லவர், நேர்மையுள்ளவர்: ஆகவே, பாவிகளுக்கு நல்வழி கற்பிப்பார். நீதி நெறியில் எளியோரை நடத்துவார்: எளியோர்க்குத் தம் வழியைக் கற்பிப்பார்.

மத்தேயு 11:29-30

உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது, என் சுமை எளிது."

சங்கீதங்கள் 24:5

உம் உண்மை என்னும் நெறியில் என்னை நடத்தி எனக்கு அறிவு புகட்டியருளும்: என் மீட்பாரம் இறைவன் நீரே, என்றும் உம்மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

கொலோசையர் 3:16

கிறிஸ்துவின் வார்த்தை நிறை வளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக. முழு ஞானத்தோடு ஒருவருக்கொருவர் போதியுங்கள். அறிவு புகட்டுங்கள். தேவ ஆவி ஏவிய சங்கீதங்களையும் புகழ்ப்பாக்களையும் பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடுங்கள்.

மத்தேயு 28:19-20

நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ! நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்."

தீத்துஸ் 2:1

நீரோ நலமிக்க போதனைக்கேற்பப் பேசுவீராக

1 அருளப்பர் 2:27

நீங்களோ அவரிடமிருந்து அபிஷுகம் பெற்றிருக்கிறீர்கள்; அந்த அபிஷுகம் உங்களில் நிலைத் திருக்கிறது; ஆகவே ஒருவரும் உங்களுக்குக் கற்பிக்கத் தேவையில்லை; அவரது அபிஷுகமே உங்களுக்கு எல்லாவற்றைக் குறித்தும் கற்பித்து வருகிறது. உண்மையைத்தான் கற்பித்து வருகிறது, பொய்யையன்று. எனவே, அது உங்களுக்குக் கற்பித்தது போல அவருள் நிலைத்திருங்கள்.

இசையாஸ் ஆகமம் 26:9

என் ஆன்மா இரவில் உம்மேல் ஆவல் கொள்ளுகிறது, என் ஆவி எனக்குள்ளே ஏக்கத்தோடு உம்மைத் தேடுகிறது; உம்முடைய நீதித்தீர்ப்புகளை நீர் பூமியின் மேல் செலுத்தும் போது, பூமியின் மக்கள் நீதி என்ன என்பதை அறிகின்றனர்.

சங்கீதங்கள் 142:10

உம் திருவுளப்படி நடக்க எனக்குக் கற்பித்தருளும்; ஏனெனில் நீரே என் இறைவன்: நல்லது உமது ஆவி, அது என்னைச் செய்மையான நிலத்தில் நடத்துவதாக.

பழமொழி ஆகமம் 4:11

நான் உனக்கு ஞானத்தின் நெறியைக் காண்பிப்பேன்; நேர்மையின் நெறிகளில் உன்னை நடத்துவேன்.

அருளப்பர் 14:26

தந்தை என் பெயரால் அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியான துணையாளரும் உங்களுக்கு எல்லாம் அறிவுறுத்துவார்; நான் உங்களுக்குக் கூறியதெல்லாம் நினைவூட்டுவார்.

அருளப்பர் 7:16

இயேசுவோ, ”என் போதனை என்னுடையதன்று, என்னை அனுப்பினவருடையதே.

அப்போஸ்தலர் பணி 20:20

நன்மை தரும் யாவற்றையும் உங்களுக்கு அறிவிக்க நான் பின்வாங்கவில்லை; வீடு வீடாகவும் போய்ப் போதித்தேன்.